# 15

# கிறிஸ்து, சபையின் தலைவர்

ஒரு கடைக்குள்ளாக ஓடி வந்த சிறு பையன்களைப் பற்றிய பழைய கதையொன்று கூறப்படுகின்றது. அவர்கள் சில பொருட்களை வாங்கிக் கொண்டு அங்கிருந்து ஓட்டம் பிடித்தனர். அவர்கள் கண்காணாமல் மறைந்த சில நிமிடங்களில், இன்னொரு பையன் ஓடி வந்தான். அவன் கடையின் குமாஸ்தாவிடம், "பையன்கள் கூட்டமாக இங்கு வந்ததைப் பார்த்தீர்களா?'' என்று கேட்டான். அந்தக் குமாஸ்தா, "ஆம், அவர்கள் இங்கிருந்து போய் பதினைந்து நிமிடங்கள் கூட ஆகவில்லை. அவர்கள் மிகவும் அவசரத்தில் இருந்தார்கள்" என்று கூறினார். அதற்கு அந்தப் பையன், ''எந்த வழியாய் அவர்கள் போனார்கள்? நான் அவர்களின் தலைவன்" என்று சொன்னான்!

நாம் மிகவும் அடிக்கடிப் பார்க்கக் கூடிய தலைமைத்துவத்தின் எடுத்துக்காட்டாக இந்தப் பையன் இருக்கின்றான்-அது முன்னிருந்து வழிநடத்தக்கூடிய தலைமைத்துவமாய் இராமல், பின்னால் இருந்து கொண்டு, பின்பற்றுபவர்கள் எங்கே போய் விட்டார்கள் என்று திகைக்கக் கூடிய தலைமைத்துவமாய் இருக்கின்றது! மனிதனுடைய தலைமைத்துவத்தின் வலுவின்மையும், தவறுகளுமே அதன் இடர்ப் பாடாக இருக்கின்றது. மனிதத் தலைமைத்துவமானது ஏதாவது ஒரு சமயத்தில் ஊக்கக் குறைவைக் கொண்டுவந்து விடுகின்றது. மனிதர்கள் எப்பொழுதுமே மனிதர்களாகவே இருக்கப் போகின்றார்கள்.

சில சமயங்களில் சபையும் கூட இவ்விதமான குறைவுபட்ட

தலைமைத்துவத்தைப் பெற்றிருக்கின்றதா? பரலோகத்திற்குச் செல்லும்படியாகக் கட்டப்பட்ட இந்தக் கப்பலானது மனித பலவீனங்களும் தோல்விகளும் கொண்ட ஒரு கப்பல் தலைவரைப் பெற்றிருக்கின்றதா? சபையானது பூமியிலிருந்து, அதன் நித்திய கரையான, என்றென்றும் உள்ள மாபெரும் இடத்தை நோக்கிப் பயணம் செல்லுகையில், அதன் உறுப்பினர்கள், உடைந்து போன திசைகாட்டும் கருவியையே சார்ந்திருக்க வேண்டுமா?

சபையின் தலைவர் இயேசு கிறிஸ்துவே என்று உறுதி செய்யும் ஏவப்பட்ட வசனங்களினால் இவ்விதப் பயங்கள் நீக்கப்படுகின்றன. பவுல், "கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறார்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்" (எபே. 5:23-25) என்று எழுதினார். கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து, அதற்காக மரித்ததால், அவரே சபைக்குத் தலைவராயிருக்கின்றார். தமது மாபெரும் தியாகத்தினால், கிறிஸ்து சபைக்குத் தலைமையேற்கும் உரிமையைப் பெற்றிருக்கின்றார். "கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறார்" என்ற சொற்றொடரானது உங்கள் சிந்தனையில் ஆழமாகப் பதியட்டும். கிறிஸ்துவை சபையின் தலைவராகப் பார்ப்பதென்பது, கிறிஸ்துவின் சபை உறுப்பினர்களுக்கு உறுதிப்பாடு தருகின்றது, ஏனென்றால் அது அவர்களுக்கு அவர்கள் பெறும் தவறற்ற வழிகாட்டுதலை நினைவூட்டுகின்றது. கிறிஸ்தவ ரல்லாதவர்கள் சபைக்குள் பிரவேசிக்கக்கூட இது காரணமாய் இருக்க வேண்டும் - அதன் மூலம் அவர்களும் கிறிஸ்துவின் வழுவாத தலைமைத்துவத்தின் கீழ் வரலாம்.

கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கும் வழிகளைக் கவனிப்பதன் மூலம் நாம், "கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறார்" என்பதன் மறு உறுதிப்பாட்டுக் கருத்தை ஆழமாய்ச் சிந்திப்போம்.

## அதிகாரத்தில் அவர் தலையாயிருக்கின்றார்

முதலாவதாக, அதிகாரத்தில் கிறிஸ்து சபையின் தலையா யிருக்கின்றார். அவர் கர்த்தராக இருக்கின்றார், அவர் தமது பிரமாணத் தின்படியே வழி நடத்துகின்றார்.

கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து, பரலோகத்திற்குச் சென்ற பிறகு, பரலோகத்தின் உன்னதமான இடத்தில், அவர் தேவனுடைய வலதுபுறத்தில் அமர்த்தப்பட்டார், "எல்லாத் துரைத் தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர் பெற்றிருக்கும் எல்லா

*நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக" (எபே. 1:20).* தேவன், *"எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, ... சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்" (எபே. 1:22, 23).* பவுல் கொலோசெயருக்கு, *"அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வரா யிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறு மானவர். சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும் ... அவருக்குப் பிரியமாயிற்று" (கொலோ. 1:18-20)* என்று கூறும் பொழுது இதே சத்தியத்தையே வலியுறுத்தினார். எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவரின்படி, தேவன் இந்தக் கடைசி நாட்களில் அல்லது கிறிஸ்துவின் யுகத்தில் தமது குமாரன் மூலமாகவே நம்மிடத்தில் பேசுகின்றார் (எபி. 1:1, 2). அவர் இயேசுவை மேலாக உயர்த்தி, எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்கு அருளிச் செய்து, *"இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், ... இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், ... (பிலி. 2:10, 11).* கிறிஸ்துவானவர் சபையின் தலைவராக அல்லது இராஜ்யத்தின் அரசராக காலங்களின் முடிவு வரை ஆளுகை செய்வா ரென்றும், பின்பு அவர் சகல துரைத்தனத்தையும், சகல அதிகாரத்தை யும், வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிற வருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார் (1 கொரி. 15:24) என்றும் வேதவசனங்கள் நமக்கு உறுதியளிக்கின்றன.

இயேசுவின் சபையானது அவரது அதிகாரம் மற்றும் தலைமைத் துவத்தின் கீழ் வாழ்கின்றது. "எனது" என்பது முன் நிறுத்தப்படும் காலத்திலும் கூட, கிறிஸ்துவின் சபையார் தங்களின் சொந்த வழியை வற்புறுத்த முடியாது. அவர்கள், "நான் முதலில்" என்று சொல்லிக் கொண்டே, அதே சமயம் இயேசுவைக் கர்த்தர் என்று ஒப்புக் கொள்ளவும் முடியாது. கிறிஸ்தவர் மேற்கொள்ளும் ஒவ்வொரு முடிவும், கிறிஸ்துவினுடைய கர்த்தத்துவத்திற்குக் கீழ்ப்படிவதினால் வழி நடத்தப்படும் ஆவிக்குரிய முடிவாகவே இருக்கின்றது.

## எடுத்துக்காட்டில் அவர் தலைவராக இருக்கின்றார்

இரண்டாவதாக, எடுத்துக்காட்டில் கிறிஸ்து சபையின் தலைவராக இருக்கின்றார். தேவனுக்குக் கீழ்ப்படிவதில் அவர் ஒரு முழுமையான முன்மாதிரியாக இருக்கின்றார். தமது பாவமற்ற

*வாழ்க்கையின் மூலம் அவர் தலைமை ஏற்று நடத்துகின்றார்.*

*கிறிஸ்து பாவஞ் செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லையென்று பேதுரு கூறினார். அவர் வையப்படும் போது பதில் வையவில்லை. பாடுபடும் போது அவர் பயமுறுத்த வில்லை (1 பேது. 2:22-23).*

*கிறிஸ்துவானவர் தவறு செய்தமைக்காக மன்னிப்புக் கேட்க வேண்டிய தேவையே ஏற்பட்டதில்லை. ஒரு வார்த்தை கூட அவர் தவறாகப் பேசி அதைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும்படியான சூழ்நிலை எப்பொழுதுமே எழுந்ததில்லை. பாவச் சிந்தனை எதையும் அவரது இருதயமானது அறிந்ததில்லை. அவரது விரோதிகள் அவரது வாழ்க்கையைக் கூர்ந்து கவனித்தும் கூட ஒரு பாவத்தையும் அவர்களால் காண முடியாமல் போயிற்று.*

*நாம் இதைப் போன்ற வாழ்க்கை-உண்மையான, பரிசுத்தமான மற்றும் மதிப்புமிக்க வாழ்க்கை-வாழ வேண்டுமென்றுதான் அவர் விரும்புகின்றார் (பிலி. 4:8). யாக்கோபு, "... தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல. அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு சோதிக்கப்படுகின்றான்" (யாக். 1:13, 14) என்று எழுதினார். கிறிஸ்து நமது எதிராளியல்ல, ஆனால் மத். 4:3ல் "சோதனைக்காரன்" என்று அழைக்கப்படும் பிசாசானவனே நமது விரோதியாய் இருக்கின்றான். அவன் கர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகிறான் (1 பேது. 5:8). அவன் நமது பலவீனங் களிலிருந்து அனுகூலமடைய ஆயத்தமாயிருக்கின்றான்.*

*கிறிஸ்துவும் நமது பலவீனங்களை அறிந்திருக்கின்றார்; அவர் நமது போராட்டங்களைப் புரிந்து கொள்கின்றார். அவரும் கூட இந்தச் சோதனைக்காரனை எதிர்கொள்ள வேண்டியிருந்தது, ஆனாலும் அவர் பாவம் செய்யவில்லை (எபி. 4:15). அவர் நமக்கு முன்பாகச் சோதனைகளை வைப்பதில்லை; மாறாக பாவத்திலிருந்து தப்பித்துக் கொள்ளக் கூடிய வழியை அவர் நமக்கு கொடுத்து, நம்மால் தாங்க முடியாத சோதனைகளில் அவர் நம்மைப் பாதுகாக்கின்றார். (1 கொரி. 10:13).*

*சபையின் தலைவரானவர், தாம் அதிகாரத்தில் முழுமையுள்ள வராய் இருப்பது போலவே, பண்பிலும் முழுமையுள்ளவராய் இருக்கின்றார். அவரது சபையானது அவருடைய கட்டளைகளைக் கைக்கொண்டு, அவரது வாழ்க்கையைப் போலவே வாழ வேண்டிய*

தாய் இருக்கின்றது. 1 யோவா. 2:6ல், "அவருக்குள் நிலைத்திருக்கிறேன் என்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும்" என்று கூறப்படுகின்றது. சபைக்கு இயேசு கொடுக்கின்ற தனிச் சிறப்புள்ள தலைமைத்துவத்தின் காரணமாகவே பவுல், "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல, நீங்கள் என்னைப் பின்பற்று கிறவர்களாயிருங்கள்'' (1 கொரி. 11:1) என்று மற்றவர்களுக்குக் கட்டளையிட முடிந்தது.

ஒரு கண்ணோட்டத்தில், கிறிஸ்து நமது முழு நிறைவான இரட்சகரானார். தேவனுக்கு முன்பாகப் பரிபூரணமான வாழ்வை வாழ்ந்ததால், அவர் நமது இரட்சகராவதற்குப் பூரணமான தகுதியுள்ளவராகி, பாவத்திற்கு ஈடுசெய்ய (கிரயம் கொடுக்க) தமது பாவமற்ற ஜீவனை தேவனுக்கு அளிக்க முடிந்தது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், ''அவர் குமாரனாயிருந்தும், பட்டபாடு களினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவருக்கும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி" (எபி. 5:8, 9) என்று காரணம் காட்டினார்.

நத்தானியேல் ஹாவ்த்தோர்ன் எழுதிய "மாபெரும் கல்முகம்" என்ற கதையானது நாம் எதை நோக்குகின்றோமோ அதாகவே ஆகின்றோம் என்பதையும், நாம் எதைப் பாராட்டுகின்றோமோ அது போலவே செய்கின்றோம் என்பதையும் நமக்கு நினைவுபடுத்து கின்றது. மலையின் ஓரத்தில் செதுக்கப்பட்டு இருந்த கருணைத் தோற்றமுள்ள ஒரு முகமானது துன்புறுத்தப்பட்ட மக்கள் வாழ்ந்த கிராமம் இருந்த ஒரு சமவெளியை நோக்கியிருந்தது. அந்த மாபெரும் கல்முகத்திற்கு ஒப்பான முகமுடைய ஒருவர் ஒரு நாளிலே தங்களை விடுவிக்க வருவார் என்று அந்தச் சமூகத்தினர் நம்பியிருந்தார்கள். அந்தக் கிராமத்துப் பையன் ஒருவன் அந்தக் கல்முகத்தைப் பற்றி ஆர்வத்துடனும் விருப்பத்துடனும் தொடர்ந்து சிந்தித்தான். காலங்கள் கடந்த போது, அந்தக் கல்முகத்தையே நோக்கியதாலும், அதைப் பாராட்டியதாலும், அந்த இளைஞன் அம்முகத்தைப் போன்றவனாக மாறினான், அவனைத் தங்கள் விடுதலையாளனாக அந்தச் சமுதாயம் விரைவிலேயே அடையாளம் கண்டுகொண்டது.

நாம் பற்றிக்கொள்ளும் சத்தியத்தைப் போலவே நாமும் ஆகி விடுகின்றோம் என்பது சபையைப் பொறுத்தமட்டில் விசேஷித்த உண்மையாக இருக்கின்றது. பவுல், "நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறது போலக்

*கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்" (2 கொரி. 3:18) என்று கூறினார்.*

*கிறிஸ்துவின் சபையானது எப்படி வாழ்வது என்பதற்கு ஒரு முன்மாதிரியாக அவருடைய வாழ்க்கையைப் பார்க்கின்றது. எடுத்துக்காட்டில் அவர் நமது தலையாக இருக்கின்றார். அதன் உறுப்பினர்கள் அவரைப் பார்ப்பதோடு மட்டுமல்லாது, அவரில் பார்க்கின்றார்கள் (எபி. 12:2). அவர் தமது முழுமையான வாழ்க்கையினால் சபையை என்றென்றும் வழி நடத்துகின்றார்.*

## அன்பில் அவர் தலையாயிருக்கின்றார்

*மூன்றாவதாக, அன்பில் கிறிஸ்து சபையின் தலையாயிருக்கின்றார். அவர் தமது ஆச்சரியமான அன்பினால் தமது மக்களை வழி நடத்தி, கட்டளையிடுகின்றார்.*

*தமது மரணத்திற்கு முந்திய இரவில் இயேசு தமது சீஷர்களிடம், "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதனால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள்" என்றார் (யோவா. 13:34, 35). மேலும் அவர் அவர்களிடத்தில், "நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது" (யோவா. 15:12) என்றும் கூறினார்.*

*கிறிஸ்து தம்மைப் பின்பற்றியவர்களிடத்தில் காட்டிய இந்த அன்பானது அவர்களை மூன்று வழிகளில் முன் நடத்துகின்றது. முதலாவது, இது அவர்கள் அவரில் அன்புகூர, காரணமாகின்றது. யோவான், "அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்பு கூருகிறோம்" (1 யோவா. 4:19) என்று கூறினார். இரண்டாவது, அவரது அன்பானது கிறிஸ்தவர்கள் ஒருவரிலொருவர் அன்புகூர காரணமாகின்றது. யோவான், "அவர் நம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்" (1 யோவா. 3:16) என்று எழுதினார்.*

மூன்றாவது, அவரது அன்பானது, அவரைப் பின்பற்றுபவர்கள் அவருடைய சித்தத்தைச் செய்யக் காரணமாயிருக்கின்றது. கிறிஸ்து, "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" (யோவா. 14:15) என்று கூறினார்.

கிறிஸ்து பூமியில் ஊழியம் செய்ததுபோது அதைக் கவனித்த தூதர்கள் பயபக்தியாயிருந்திருக்க வேண்டும். அவர் சிலுவையில் மரணமடைவதற்கு முந்திய நாளிலே, அவர் ஒரு பாத்திரத்தையும் துண்டையும் எடுத்துக் கொண்டு, அன்பினாலும் தாழ்மையினாலும் நிறைந்தவராய்த் தமது சீஷர்களின் பாதங்களைக் கழுவினார்! இராஜாதி இராஜாவானவர், அன்பின் ஊழியத்தில் தமது சீஷர்களுக்கு முன்பாக முழந்தாள் படியிட்டார். கிறிஸ்து மனிதராக ஆனதோடு மட்டுமல்லாது, மனிதர்களுக்கு அவர் ஒரு ஊழியக்காரராகவுமானார். அவர் மனுஷ ரூபமெடுத்து ஒரு அடிமை ஊழியக்காரனுடைய வாழ்க்கையை வாழ்ந்தார் (பிலி. 2:7).

இந்த முக்கியமான காட்சியைப் பின்வரும் வார்த்தைகளுடன் யோவான் அறிமுகப்படுத்தினார்: "தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தாரென்பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்து" (யோவா. 13:3). வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், கிறிஸ்து தமது அதிகாரம், நிலை, எதிர்காலம் ஆகியவற்றை விசேஷமாக உணர்ந்திருந்த ஒருவேளையில், தமக்குள்ள யாவற்றையும் விட்டுக் கொடுத்து (தம்மையே தாழ்த்தி) தாம் வாழ்ந்திருந்த வாழ்க்கைக்கு இசைந்த, அடிமையின் ஊழியம் செய்ய அவர் தம்மை ஒப்புக் கொடுத்தார். அவர் தமது உயர்ந்த நிலையையும் பலத்தையும், தமது வல்லமையையும், தமது நிலையையும் அங்கு காட்டவில்லை. அன்பினால், அவர் தமது சீஷர்களுக்குத் தாழ்மையின் பாடத்தைக் கற்றுக்கொடுக்க அதை உபயோகித்தார்.

சபையின் தலை என்ற முறையில், அவரது வல்லமை மற்றும் அதிகாரத்துடன் அவர் அன்பினால் ஊழியம் செய்கின்றார்! தமது சீஷர்களின் பாதங்களைக் கழுவிய போது அவர் கர்த்தர் என்ற தமது நிலையை விட்டுவிடவில்லை; கர்த்தர் என்ற தமது நிலையை அவர், அவர்களுக்கு ஊழியம் செய்யவும், அவர்களுக்குள் ஊழியத்தின் உற்சாகத்தைக் கட்டி எழுப்பவும் பயன்படுத்தினார். அவர் அவர்களிடத்தில், "நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான்.

ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக் கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்" (யோவா. 13:13-15) என்று கூறினார்.

அன்பு என்றால் என்ன என்பதையும் உண்மையான அன்பை எவ்விதம் வெளிப்படுத்துவது என்பதையும் இயேசு முடியக் கூடியதிலேயே மிக உயர்ந்த வழியில் சித்திரித்துக் காண்பித்தார். அவர் தமது அன்பினால் தமது சபையை வழிநடத்திச் செல்லுகின்றார். கிறிஸ்தவர்கள் அவருடைய அன்பின் சூழ்நிலையில் வாழ்ந்து, அந்தச் சூழ்நிலையைச் சுவாசித்து, அதற்குப் பதில்செயல் செய்கின்ற படியினால் அவர்கள் அவருக்கு ஒப்பாக மறுரூபப்படுகின்றார்கள். யோவான், "பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக் கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான். அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்" (1 யோவா. 4:7, 8) என்று கூறியதில் வியப்பேதும் இல்லை.

## முடிவுரை

கிறிஸ்துவானவர், அதிகாரத்திலும், எடுத்துக்காட்டிலும், அன்பிலும் மற்றும் ஊழியத்திலும் நிச்சயமாகவே சபைக்குத் தலையாயிருக்கின்றார். அவர் தமது கர்த்தத்துவம், தமது பரிபூரண மான வாழ்வு, மற்றும் தமது வற்புறுத்தும் அன்பு ஆகியவற்றின் மூலமாகத் தமது சபையை வழி நடத்துகின்றார்.

எந்த ஒரு நிறுவனம் அல்லது அமைப்பின் தலைவருமே, தனது நம்பிக்கை, அங்கீகாரம் மற்றும் பலம் ஆகியவற்றை அவர் வழிநடத்திச் செல்லும் நிறுவனம் அல்லது அமைப்பிற்கு கொடுக்க வேண்டும். கிறிஸ்துவுக்கும் சபைக்கும் கூட இது நிச்சயமாகவே உண்மையாகும். தேவனுடைய தெய்வீக குமாரனாகிய கிறிஸ்து, அவருடைய தலைமைத்துவத்தினாலும் வழி நடத்துதலினாலும், அவருடைய குற்றமற்ற பரிபூரணத்தையும் அளவற்ற ஞானத்தையும், இணையற்ற நேர்மையையும் மற்றும் மகா பெரிய பலத்தையும் சபைக்குக் கொடுக்கிறார்.

கிறிஸ்துவின் சபையானது கிறிஸ்துவால் தோற்றுவிக்கப்பட்டது,

*கிறிஸ்துவால் வழிநடத்தப்படுகின்றது, கிறிஸ்துவின் பெயரை அணிந்து கொள்ளுகின்றது. கிறிஸ்து தமக்கு உரிமையாக இருக்கின்ற எல்லாவற்றையும் சபைக்குக் கொடுத்திருக்கின்றார்; கிறிஸ்துவுக்கு உள்ள எதிர்காலம் யாவும் சபைக்கும் இருக்கின்றது. அவர் தமது சபையை இன்றைய நாட்களில் தாங்கி நடத்துவதாகவும், அதன் எதிர்காலத்திற்காக அதைப் பரிசுத்தப்படுத்துவதாகவும் வாக்குத்தத்தம் செய்திருக்கின்றார். "கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்" (எபே. 5:27).*

*கிறிஸ்து சபையை உருவாக்கி, தமது அன்பையும் இரட்சிப்பையும் அதற்குக் கொடுத்து, தமது நித்திய மகிமையின் வாக்குத்தத்தத்தினால் சபைக்கு முடி சூட்டியிருக்கின்றாரென்றால், யாராவது அவரது சபையின் உறுப்பினராக விருப்பமில்லாமல் இருப்பார்களா?*

*கிறிஸ்துவினால் வழிநடத்தப்படும் சபையில் நீங்கள் ஒரு பாகமாக இருக்கின்றீர்களா?*

## பாட வினாக்கள்

*(விடைகள் 318 ம் பக்கங்களில்)*

1. *உண்மையிலேயே வழிநடத்தாத தலைமைத்துவத்திற்கு எடுத்துக்காட்டுகள் தரவும்?*
2. *இயேசு அதிகாரத்தில் சபைக்குத் தலையாயிருப்பது எவ்விதம்? இயேசு சகல அதிகாரமும் பெற்றிருக்கிறார் என்று போதிக்கும் வசனப்பகுதி எது?*
3. *கிறிஸ்து சபையின் தலைவராக எவ்வளவு காலம் ஆளுகை செய்ய வேண்டியிருக்கின்றது? (1 கொரி. 15:23-25ஐக் காணவும்).*
4. *இயேசு நமது பரிபூரணமான இரட்சகரானது எவ்விதம்? (எபி. 5:8, 9ஐக் காணவும்).*
5. *கிறிஸ்துவை நோக்கி மனம் மாறுதல் ஒரு சமயத்தில் நடக்கும் நிகழ்ச்சியாகும், ஆனால் அவரது சாயலுக்கொப்பாக மறுரூபமடைதல் என்பது நாளடைவில் நடக்கும் செயல் பாடாகும். மறுரூபமடையும் செயல்பாடு பற்றி விவாதித்து அறியவும் (2 கொரி. 3:18ஐக் காணவும்).*

6. கிறிஸ்து தமது சீஷர்களின் பாதங்களைக் கழுவிய நிகழ்ச்சியானது அன்றாடம் நாம் கிறிஸ்துவுக்காக வாழ்வது பற்றிப் போதிப்பது என்ன?
7. இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள் “ஒவ்வொருவரும் மற்றவருடைய பாதங்களைக் கழுவுவது” எவ்விதம்?